# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

## SUMMATIVE ASSESSMENT - II ( 2015-2016 )

**CLASS : IX**

**Maximum Marks : 90** **TAMIL** **Time : 3 hours**

மதிப்பெண்கள் : 90 நேரம் : 3 மணி

# தமிழ்

The question paper is diveded into four Sections.
இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

| | | | |
|---|---|---|---|
| SECTION | : A | Reading Comprehension | - 15 Marks |
| பிரிவு | : அ | படித்தல் (உரைநடைப்பகுதி ) | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | : B | Writing | - 20 Marks |
| பிரிவு | : ஆ | எழுதுதல் | - 20 மதிப்பெண்கள் |
| SECTION | : C | Grammar | - 15 Marks |
| பிரிவு | : இ | இலக்கணம் | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | : D | Literature / Textbooks | - 40 Marks |
| பிரிவு | : ஈ | இலக்கியம்/தமிழ்ப்பாடநூல்கள் | - 40 மதிப்பெண்கள் |

★ எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

★ ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன

★ வினாத்தாள் 13 பக்கங்களைக் கொண்டது.

## பகுதி - அ

**1 ) பின்வரும் பத்திகளைப் படித்து தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

நல்லவராக இருந்தால் மட்டும் போதாது, வல்லவராக இருக்க வேண்டும் அல்லவா? இந்த உலகியல் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால் நல்லவராகவும் இருக்க வேண்டும். ஒரு குடும்பத்தை எடுத்துக்காட்டாகக் கொண்டு பார்க்கலாமே, நல்ல மருமகளாக வாழத் தொடங்கும் ஒரு பெண்ணுக்கு வல்லமை இல்லாவிட்டால் மற்றவர்கள் செய்யும் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டு, தவிக்க வேண்டி வருமே! போட்டி, பொறாமை,கொடுமை ஆகியவற்றுக்கு எதிர்நின்று தாக்குப் பிடித்து வாழ்க்கையில் வெற்றி பெற வல்லமை வேண்டும். மருமகளிடத்தில் வல்லமை என்பது கொடுமை செய்வதற்காக அன்று, கொடுமைகளை எதிர்த்து நிற்பதற்காக எந்த நிலையில் வல்லமையும் வரவேற்கத்தக்க உலகியல் பண்பாக அமைகின்றது. எனவே நல்ல தன்மையோடு வல்லமையும் சேரப் பெற்று வாழ வேண்டும்.

**<u>வினாக்கள்</u>** **5 x 1 = 5**

**i) ஒருவர் எப்படி இருத்தல் வேண்டும் ?**

அ ) கருமியாக

ஆ) பொறாமையுடையவராக

இ ) குணமானவராக

ஈ ) நல்லவராகவும், வல்லவராகவும்

**ii) வாழ்க்கையில் வெற்றி பெற ஒரு பெண்ணுக்கு வேண்டியது எது ?**

அ ) வறுமை

ஆ) பொறுமை

இ ) வல்லமை

ஈ ) பொய்மை

**iii) மருமகளிடத்தில் எதற்கு வல்லமை வேண்டும் ?**

அ ) கொடுமையை எதிர்க்க

ஆ) நல்ல மருமகளாக

இ ) வாழ்க்கை வாழ

ஈ ) எதிர்த்துப் போராட

**iv) என்ன சேரப்பெற்று நாம் வாழ வேண்டும் ?**

அ ) நல்ல தன்மையோடு வல்லமை

ஆ) வல்லமையோடு நல்ல தன்மை

இ ) கெட்டதன்மையோடு வல்லமை

ஈ ) கெட்டதன்மையோடு கொடுமை

**v) வல்லமை என்பது என்ன பண்பாக அமைகின்றது ?**

அ ) உலகியல் பண்பாக

ஆ) வாழ்வியல் பண்பாக

இ ) மரபியல் பண்பாக

ஈ ) நட்பியல் பண்பாக

2) தமிழில் வழங்கும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று கலம்பகம். புயவகுப்பு, அம்மானை, மறம், குறம் முதலிய பதினெட்டு உறுப்புகள் அமைய, நால்வகைப் பா இனங்களும் கலந்து வர, அந்தாதித் தொடையாக நூறு செய்யுட்களால் பாடப்படுவது கலம்பகம். தில்லையில் எழுந்தருளியுள்ள இறைவன் சிவபெருமான் மீது பாடப் பெற்றமையால் தில்லைக் கலம்பகம் என்னும் பெயரையும் இது பெற்றது.

அம்மானை என்பது மகளிர் விளையாட்டு வகைகளுள் ஒன்று. அம்மானை ஆடும் போது மகளிர் பாடும் பாட்டுக்கு அம்மானைவரி என்பது பெயர். அப்பாடலில் ஒருத்தி ஒரு கருத்தைக் கூறுவாள். இன்னொருத்தி அக்கருத்தை ஒரு வினா எழுப்பி மறுப்பாள். மற்றொருத்தி அவ்விருவருக்கும் பொருந்தும் வகையில் ஒரு செய்தியை விடையாகக் கூறுவாள். இங்ஙனம் பாடிக் கொண்டே பந்துகளை உருட்டி விளையாடுவது அம்மானை விளையாட்டாகும்.

**வினாக்கள்**

**i) கலம்பகம் எந்த வகைகளுள் ஒன்று ?**

அ ) இதிகாச இலக்கிய
ஆ) பேரிலக்கிய
இ ) பிரபந்திலக்கிய
ஈ ) சிற்றிலக்கிய

**ii) எந்த செய்யுட்களால் பாடப்படுவது கலம்பகம் ?**

அ ) பதினாறு உறுப்புகள் அமைய
ஆ) பதினெட்டு உறுப்புகள் அமைய
இ ) பதினான்கு உறுப்புகள் அமைய
ஈ ) பன்னிரண்டு உறுப்புகள் அமைய

**iii) ) தில்லையில் எழுந்தருளியுள்ள இறைவன் யார் ?**

அ ) விஷ்ணு
ஆ) திருமால்
இ ) பெருமாள்
ஈ ) சிவபெருமான்

**iv) அம்மானை எவ்வகை விளையாட்டுகளில் ஒன்று ?**

அ ) மகளிர் விளையாட்டு வகைகளுள் ஒன்று
ஆ) ஆடவர் விளையாட்டு வகைகளுள் ஒன்று
இ ) ஆடவ, பெண்டீர் விளையாட்டு வகைகளுள் ஒன்று
ஈ ) சிறுவர், மகளிர் விளையாட்டு வகைகளுள் ஒன்று

**v) மகளிர் பாடும் பாட்டினை எவ்வாறழைப்பர் ?**

அ ) அம்மானைக்குயும்
ஆ) அம்மானை குறவை
இ ) அம்மானைக்கூத்து
ஈ ) அம்மானை வரி

3 ) உயிர் வாழ்வது உண்பதற்கன்று - உண்பது உலகம் வாழத் தொண்டாற்றுவதற்கே என்னும் உண்மையை உணர்ந்து உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே என்னும் ஒல்காப் புகழ் தொல்காப்பியர் தம் இலக்கணத்திற்கு இலக்கியமாய் அமைகின்றார்.

வினையே ஆடவர்க்கு உயிர் என்று குறுந்தொகை கூறுகிறது. இதனைத் தன் வாழ்வின் குறிக்கோளாய்க் கொண்டவர்கள், வினை முடித்து அதனால் இன்பம் வரும் என்றால், தம் விதி முடிந்து போனாலும் வேண்டிப் பெற்றுக் கொண்டனர். தம் உழைப்பால் தொல்லுலகை நல்லுலகம் ஆக்கியவர்கள் உழைப்பாளர்கள். வாழ்க்கை என்னும் தேரினை ஓட்ட அறம், பொருள் என்னும் இரு சக்கரங்களைப் பூட்டி, உழைப்பென்னும் உலகத் தெருக்களில் இன்று உலா வருகின்றனர்.

<u>வினாக்கள்</u> **5 x 1 = 5**

**i) உயிர் வாழ்வது எதற்காக ?**

அ) உண்பதற்காக

ஆ) சிரிப்பதற்காக

இ) உண்பதற்காக

ஈ ) தொண்டாற்றுவதற்காக

**ii) உலகமென்பது யாருக்காக ?**

அ) உயர்ந்தோர்க்காக

ஆ) செல்வர்க்காக

இ) பெண்களுக்காக

ஈ ) ஏழைக்காக

**iii) தொல்காப்பியர் இயற்றியது எவ்வகை நூல் ?**

அ) சரித்திர நூல்

ஆ) இலக்கண நூல்

இ ) நாடக நூல்

ஈ ) குழந்தைகள் நூல்

**iv) வினையே ஆடவர்க்கு உயிர் - என்று கூறும் நூல் எது ?**

அ) நற்றிணை

ஆ) குறுந்தொகை

இ) புறநானூறு

ஈ ) கலித்தொகை

**v) வாழ்க்கை என்னும் தேரினை ஓட்ட உதவும் சக்கரங்கள் யாவை ?**

அ) அகம், புறம்

ஆ) அறம்,பொருள்

இ) இன்பம், துன்பம்

ஈ ) இன்பம், வீடு

## பகுதி - ஆ **1 x 8 = 8**

4 ) உன் பள்ளியில் நடைபெற்ற பொங்கல்விழா குறித்து தோழன்/தோழிக்குக் கடிதம் எழுதுக.

( அல்லது )

உமது பகுதிக்குச் சாலை வசதி செய்து தர வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**எக்கடிதமாயினும் உமது முகவரி**

அமுதன் / அமுதா , 16 பாளையம் தெரு, பொம்மனூர் , பாளையங்கோட்டை.

**1 x 8 = 8**

5 ) **கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில் ஏதேனும் ஒன்றிற்குக் கட்டுரை எழுதுக.**

அ) முன்னுரை - மொழியின் அவசியம் - கருத்துப் பரிமாற்றம் - தாய்மொழி - தமிழின் தனித்துவம் - தமிழின் இளமைத் தன்மை - தமிழ் செம்மொழி - முடிவுரை

ஆ) முன்னுரை - வான்மறை வள்ளுவர் - அறம், பொருள், இன்பம் - தனி மனிதன் - அற உரைகள் - உலகப்பொதுமறை - முடிவுரை.

இ ) முன்னுரை - சுற்றுச்சூழல் - சுற்றுச்சூழலில் ஏற்படும் மாசுகள் - மாசுகளின் வகைகள் - தீமைகள் - தூய்மையின் அவசியம் - முடிவுரை.

6 ) இரத்ததானமுகாம் பற்றி ஓர் அறிக்கை எழுதுக. **1 x 4 = 4**

( அல்லது )

வனவிலங்குப் பூங்கா திறப்பு விழா பற்றிய அறிக்கை எழுதுக.

## பகுதி - இ

7 ) **சான்று தருக. ( மூன்று மட்டும் )** **3 x 1 = 3**

**i) விகாரப்புணர்ச்சி**

அ) வாழை இலை

ஆ) பொன் வளையல்

இ) கற்கோட்டை

ஈ ) கல்யானை

**ii) ஓரசைச்சீர்**

அ) தில்லை

ஆ) வளவன்

இ) தார்

ஈ) இளங்கோ

**iii ) தேமாங்காய்**

அ) கண்ணதாசன்

ஆ) செந்தாமரை

இ) சான்றாண்மை

ஈ) மரவேர்

**iv ) தோன்றல் விகாரம்**

அ) கற்குவளை

ஆ) பொற்கொல்லன்

இ) தமிழ்ப்பாடம்

ஈ) தலைநகர்

**v) ஒற்று இரட்டித்துப் புணர்தல்**

அ) காட்டுக்கோழி

ஆ) பச்சிலை

இ) வாழைத்தண்டு

ஈ ) கருங்குழி

8 ) நிரப்புக. ( மூன்று மட்டும் ) **3 x 1 = 3**

**i) காய்ச்சீர் ____________ வகைப்படும்.**

அ) இரண்டு

ஆ ) நான்கு

இ) மூன்று

ஈ) ஐந்து

**ii ) அளவடிக்கு ___________ என்னும் வேறு பெயருண்டு.**

அ) நேரடி

ஆ) சிந்தடி

இ) கழிநெடிலடி

ஈ ) நெடிலடி

**iii ) பொருளுக்கேற்பச் சொற்களைக் கூட்டிப் பொருள்கொள்வது ___________.**

அ) அடிமறிமாற்றுப் பொருள்கோள்

ஆ) அளைமறிபாப்புப் பொருள்கோள்

இ) கொண்டுகூட்டுப் பொருள்கோள்

ஈ ) தாப்பிசைப் பொருள்கோள்

iv ) மா முன் நேர் வருவது __________.

ஆ) நேரொன்றாசிரியத்தளை

ஆ) நிரையொன்றாசிரியத்தளை

இ) வெண்சீர் வெண்டளை

ஈ ) கலித்தளை

v ) தொடை ______ வகைப்படும்.

அ) பத்து

அ) எட்டு

இ) இரண்டு

ஈ) ஐந்து

9 ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

i) செங்கமலம் ( அலகிட்டு எழுதுக )

அ) நேர் நேர் நேர்

ஆ) நேர் நிரை நேர்

இ) நிரை நேர்

ஈ ) நேர் நேர்

ii) என் ( வாய்ப்பாடு எழுதுக )

அ) பிறப்பு

ஆ) மலர்

இ) காசு

ஈ ) நாள்

iii ) அருளாசி ( பிரித்து எழுதுக )

அ) அரு + ஆசி

ஆ) அருள் + ஆசி

இ) அரு + ள் + ஆசி

ஈ ) அருட் + ஆசி

iv ) எழுத்தெல்லாம் ( வாய்ப்பாடு கூறுக )

அ) தேமாங்காய்

ஆ) கருவிளங்காய்

இ ) கூவிளங்காய்

ஈ ) புளிமாங்காய்

v) கூழைமோனை ( எச்சீர்களில் ஒன்றி வரும் ? )

அ) 1,2,3,4

ஆ) 1,3,4

இ) 1,2

ஈ ) 1,2,3

0 ) இலக்கணக்குறிப்பு தருக. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

i) குரங்கியாது

அ) குற்றியலுகரப் புணர்ச்சி

ஆ) குற்றியலுகரப் புணர்ச்சி

இ) அல்வழிப் புணர்ச்சி

ஈ ) வேற்றுமைப் புணர்ச்சி

ii) மலர்மிசை

அ) ஈரசைச்சீர்

ஆ) மூவசைச்சீர்

இ) நாலசைச்சீர்

ஈ ) பொதுச்சீர்

iii) தாய்மொழி தாயினும் தகவற் போற்றுவன்

அ) சிந்தடி

ஆ) அளவடி

இ) நெடிலடி

ஈ ) கழிநெடிலடி

iv) அருளிலார்க் கவ்வுலகம் இல்லை பொருளிலார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு.

அ) பொழிப்பு எதுகை

ஆ) ஒரூஉ எதுகை

இ) கூழை எதுகை

ஈ ) மேற்கதுவாய் எதுகை

v) பாவை வந்தாள்

அ) கருவியாகுபெயர்

ஆ) காரியவாகுபெயர்

இ) கருத்தாவாகுபெயர்

ஈ) உவமையாகுபெயர்

11 ) சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (மூன்று மட்டும் ) 3 x 1 = 3

i) அ) ஒரு பகுதியை மட்டும் உருவகம் செய்வது உருவக அணி.
ஆ ) ஒரு பகுதியை மட்டும் உருவகம் செய்வது ஏகதேச உருவக அணி.
இ ) ஒரு பகுதியை மட்டும் உருவகம் செய்வது உவமை அணி.
ஈ ) ஒரு பகுதியை மட்டும் உருவகம் செய்வது இல்பொருள் உவமை அணி.

ii) அ) யான் என்பது தன்மை ஒருமைப் பெயர்.
ஆ) யான் என்பது தன்மை பன்மைப் பெயர்.
இ) யான் என்பது முன்னிலை ஒருமைப் பெயர்.
ஈ ) யான் என்பது படர்க்கை ஒருமைப் பெயர்.

iii) அ) தம் மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் குற்றியலுகரம் கு சு டு து பு று.
ஆ) தம் மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் குற்றியலுகரம் ங ஞ ண ந ம ன.
இ) தம் மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் குற்றியலுகரம் ய ர ள வ ழ ள.
ஈ ) தம் மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் குற்றியலுகரம் அ இ உ எ ஒ .

iv) அ) விகாரப்புணர்ச்சி எட்டு வகைப்படும்.
ஆ) விகாரபுணர்ச்சி இரண்டு வகைப்படும்.
இ) விகாரபுணர்ச்சி மூன்று வகைப்படும்.
ஈ) விகாரபுணர்ச்சி நான்கு வகைப்படும்.

v) அ) அளை என்பதற்கு புற்று என்று பொருள்.
ஆ) அளை என்பதற்கு வளை என்று பொருள்.
இ) அளை என்பதற்கு வலை என்று பொருள்.
ஈ ) அளை என்பதற்கு வாழை என்று பொருள்.

## பகுதி - ஈ

12) பின்வரும் பத்தியைப் படித்து தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.

உலகின் உயரிய வாழ்வுக்கு அச்சாணியாய், மூல ஒளியாய்த் திகழ்கின்ற எழுகதிரைப் போற்றி வணங்குகின்ற உயிர்ப்புள்ள திருநாள் பொங்கல். வளமையின் அடையாளமே அறுவடைக் காலம்.உலகில் தோன்றிய தொன்மைக் குடிகள் தமிழர்களே. ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஓரிடத்தில் நிலைத்து உழவுத் தொழில் செய்து, பண்பட்ட நாகரிக வாழ்வை மேற்கொண்டவர்கள் தமிழர்கள். அவ்வுழவுத்தொழில் நாகரிகத்தின் அடையாளச் சின்னமாக இன்றும் திகழ்ந்து பண்டைய மரபையும் பண்பாட்டையும் பறைசாற்றி நிற்பதுதான் உழவர் திருவிழா. இந்நன்னாளின் பழமைச் சிறப்பை நோக்கித் தமிழர் திருநாள் என இன்றும் போற்றப்படுகிறது.

**<u>வினாக்கள்</u>** **5 x 1 = 5**

**i) உலகில் உயரிய வாழ்வுக்கு அச்சாணியாய்,மூல ஒளியாய்த் திகழ்கின்ற எழுகதிரைப் போற்றி வணங்குகின்ற உயிர்ப்புள்ள திருநாள்**

அ) தீபாவளி

ஆ) கார்த்திகை தீபம்

இ) வினாயகர் சதுர்த்தி

ஈ ) பொங்கல்

**ii) வளமையின் அடையாளமே**

அ) திருவிழாக் காலம்

ஆ) மழைக்காலம்

இ ) அறுவடைக்காலம்

ஈ ) கோடைக்காலம்

**iii) உலகில் தோன்றிய தொன்மைக் குடிகள்**

அ) கொங்கணியர்

ஆ) அரேபியர்கள்

இ) தமிழர்கள்

ஈ ) ஆங்கிலேயர்கள்

**iv) ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஓரிடத்தில் நிலைத்து ________ செய்து பண்பட்ட நாகரிக வாழ்வை மேற்கொண்டவர்கள் தமிழர்கள்.**

அ) மீன்பிடிக்கும் தொழில்

ஆ) மட்பாண்டம் செய்யும் தொழில்

இ ) உழவுத்தொழில்

ஈ ) பொன் நகை செய்யும் தொழில்

**v) உழவுத் தொழில் நாகரிகத்தின் அடையாளச் __________ இன்றும் திகழ்கிறது.**

அ) எண்ணமாக

ஆ) சின்னமாக

இ) நிழலாக

ஈ ) உருவமாக

13) புதுச்சேரியில் வாழ்ந்த முனுசாமி என்ற நெசவாளி, தில்லையாடி என்னும் ஊரில் பிறந்த மங்களம் என்ற மங்கையை மணந்தார்.திருமணத்திற்குப் பின்னர் தில்லையாடியிலேயே அவர்கள் நெசவுத்தொழில் செய்து வாழ்ந்து வந்தனர்.அந்நாளில் ஆங்கிலேயர்கள் தம் நாட்டுத் துணிகளை இந்தியாவிற்குக் கொண்டு வந்து விற்பனை செய்தனர்.இதனால் நம் நாட்டில் உற்பத்தி செய்த துணிகளின் விற்பனை குறைந்தது.நெசவுத் தொழிலும் பாதிக்கப்பட்டது.அப்பாதிப்புக்கு உட்பட்டவர்களுள் முனுசாமியும் ஒருவர்.

நெசவுத்தொழில் பாதிப்பால் வறுமையில் வாடிய முனுசாமி தம் மனைவியுடன் வேலை தேடித் தென் ஆப்பிரிக்காவில் குடியேறினார். அங்குள்ள ஜோகன்பர்க் என்ற நகரத்தில் சிறிய அளவில் காய்கறிக் கடை நடத்தினார்.இந்நிலையில் 1898 ஆம் ஆண்டு முனுசாமி, மங்களம் இணையருக்குப் பெண் குாந்தை ஒன்று பிறந்தது. அந்தக் குழந்தையே வீரமங்கை வள்ளியம்மை ஆவார்.

<u>வினாக்கள்</u> **5 x 1 = 5**

**i) புதுச்சேரியில் வாழ்ந்த ஒரு முனுசாமி ஒரு**

அ) குயவர்

ஆ) தச்சர்

இ) விவசாயி

ஈ ) நெசவாளி

**ii) தில்லையாடி என்ற ஊரில் பிறந்தவர்**

அ) மயிலம்மை

ஆ) மல்லிகா

இ ) மாதவி

ஈ ) மங்களம்

**iii) ஆங்கிலேயர் தம் நாட்டு __________ இந்தியாவிற்குக் கொண்டு வந்து விற்பனை செய்தனர்.**

அ) பொருட்களை

ஆ) கப்பல்களை

இ) போர்க் கருவிகளை

ஈ ) துணிகளை

**iv) முனுசாமி ஜோகன்பர்க் என்னும் நகரத்தில் சிறிய அளவில்**

அ) பழக்கடை நடத்தி வந்தார்

ஆ) துணிக்கடை நடத்தி வந்தார்

இ) காய்கறிக் கடை நடத்தி வந்தார்

ஈ) விறகுக் கடை நடத்தி வந்தார்

v) வள்ளியம்மை பிறந்த ஆண்டு

அ) 1898

ஆ) 1998

இ) 1798

ஈ) 1878

14) பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து, தொடர்ந்து வரும் பாடலோடு தொடர்புடைய பல்விடை வினாக்களுக்கு விடை தருக.

அன்பு செய்யின் அயலாரும்
அண்டி நெருங்கும் உறவினராம்
அன்பு நீங்கின் உறவினரும்
அகன்று நிற்கும் அயலவராம்
துன்ப நோயை நீக்கிடுமேல்
துவ்வாவிடமும் அமுதமாகும்
துன்ப நோயை ஆக்கிடுமேல்
தூய அமுதம் விடமாமே!

<u>வினாக்கள்</u> 4 x 1 = 4

i) இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது ?

அ) பெண்மை

ஆ) நாட்டுப்புறப் பாடல்கள்

இ) உமர்கய்யாம் பாடல்கள்

ஈ) பழமொழி

ii) அன்பு செலுத்தினால் அயலாரும் நெருங்கிய ____________.

அ) உறவினராவர்

ஆ) நண்பராவர்

இ) மக்களாவர்

ஈ) பகைவராவர்

iii) துன்ப நோயை நீக்கிடுமேல் துவ்வா விடமும்

அ) புளிப்பாகும்

ஆ) கசப்பாகும்

இ) துவர்ப்பாகும்

ஈ) அமுதமாகும்

iv) அகன்று - பொருள் கூறுக

அ) நெருங்கி

ஆ) விலகி

இ) பெருகி

ஈ ) உருகி

**15) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக. 2 x 5 = 10**

அ) மருந்தாகும் உணவுப் பொருட்கள் பற்றி எழுதுக.

ஆ) வள்ளியம்மை ஈடுபட்ட விடுதலைப் போர் குறித்தும் அதன் விளைவு குறித்தும் எழுதுக.

இ) ஏறுதழுவுதல் பற்றி எழுதுக.

ஈ) வெப்பமயமாதல் - விளக்குக.

உ) உயிர்க்கோளத்தைப் பாதுகாக்கும் வழிமுறைகள் யாவை ?

**16) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக. 2 x 4 = 8**

அ) செல்வத்துப் பயனே ஈதல் - என்பதனைப் புறநானூற்றின் வழி நின்று விளக்குக.

ஆ) குறுந்தொகைப் பாடலில் தலைவனது நாடும், நட்பும் எங்ஙனம் சிறப்பிக்கப்படுகிறது ?

இ) பெண்மையின் குணங்களாக இராமலிங்கனார் கூறுவன யாவை ?

ஈ) பத்துவகைக் குற்றங்கள் யாவை ?

**17) பின்வரும் துணைப்பாட வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விரிவான விடை தருக. 1 x 8 = 8**

அ) நம்மாழ்வார் போட்ட கணக்கு என்ன ?

ஆ) முருகன், தனது பணத்தை எங்கு, எவ்வாறு தொலைத்தான் ?

இ) கீரைகளும் மூலிகைகளே என்பதை விளக்குக.